**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்கும் - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக் குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் ஆணைக் குழுவின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபை தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதாக என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அவ்வெளிப்படுத்துதல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 திகதியளவில் வருடாந்த ஒழுங்குறுத்தல் கட்டணமாக 2014/15 ஆண்டு முதல் இலங்கை மின்சார சபையில் இருந்து ரூபா 81,852,700 தொகையும், ஏனைய நிறுவனங்களில் இருந்து ரூபா 1,051,721 தொகையும் கிடைக்க | 2021/12/23 திகதி கூடிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் யோசனையாக இருந்தது அறவிட முடியாக் கடனாக பதிவழிப்பதற்கு முன்னர் ஆணைக்குழுவினால் அனைத்து முயற்சிகளும் எடுக்க | பெற வேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வேண்டியிருந்தது. 2021 ஜூன் 30 திகதியளவில் ஏனைய நிறுவனங்களில் இருந்து ரூபா 726,954 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் இலங்கை மின்சார சபையில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த தொகை அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | வேண்டியிருந்ததால் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய இயலுமையை கவனத்தில் எடுக்கும் படியாகும். இந்த யோசனை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்து தொடர்நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>ஏனைய நிறுவனங்களில் இருந்து பெற வேண்டியிருந்த ரூபா 1,051,720 இற்கான தொகையில் தற்போது ரூபா 726,954 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. மீதித் தொகை 2021 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் செலுத்தும் படி அறிவித்து ஞாபகர்த்தக் கடிதம் அனுப்பப்பட்டது. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 ஜூலை 18 ஆந் திகதிய 03/2018 இலக்கங் கொண்ட முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பந்திகள் I மற்றும் II | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அமைப்புக் கட்டமைப்பு மற்றும் சம்பளக் கட்டமைப்பு தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக் குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்று நிதியமைச்சரினால் அமைச்சரவைக்கு விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பித்து அங்கீகாரம் ஒன்று பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை அவ்விடயங்கள் மேற் கொள்ளாமல் பின்வருமாறு செலவுகள் செய்யப்பட்டிருந்தது.<br>(i) நிறுவனத்தின் பதவியணிக்கு 10 வகையான படிகளின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 42,795,220 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br>(ii) உதவிப் பணிப்பாளர் பதவிக்காக மாதாந்தம் ரூபா 40,000 தொகை வீதமும், முகாமைத்துவ பதவிக்காக | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு நிறுவப்பட்ட சட்டத்தின் படி அதன் சுதந்திரமான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக சட்டத்தில் கீழ்வரும் பிரிவுகள் உட்படுத்தப்பட்டுள்ளன.<br><br>**பிரிவு 12**<br>ஆணைக் குழுவின் உத்தியோகத்தர் களுக்காக படிகள் மற்றும் வசதிகள் வழங்கும் அதிகாரம் ஆணைக் குழுவிற்கு வழங்கள்.<br><br>**பிரிவு 39**<br>“இந்த சட்டம் அல்லாத ஏதேனும் உரிய சட்டம் ஒன்றில் இந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கிய ஏதேனும் ஏற்பாடுகள் அடங்கியிருந்த போதிலும் இந்த சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இந்த சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை | தயாரிக்கப்பட்டுள்ள தாபன நிருவாகம் மற்றும் செயற்படு முறைமை கோவை திறைசேரிக்கு சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியிருத்தல். |

மாதாந்தம் ரூபா 5,000 வீதமும், சாரதி பதவிக்காக மாதாந்தம் ரூபா 2,500 வீதமும், பிரயாண செலவு என செலுத்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் செயற்படு முறைமை கோவையின் படி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளுக்கு திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் கூட்டுத்தொகை ரூபா 8,511,832 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) ஆணைக் குழுவில் கடமையாற்றும் நிரந்தர ஊழியர்களுக்காக உச்ச மட்டம் ரூபா 5 மில்லியன் இற்கான மற்றும் திருப்பிச் செலுத்தும் காலம் 5 வருடங்கள் என்ற அடிப்படையில் வாகனங்களுக்காக கடன் திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்த திட்டத்திற்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் படி வங்கி ஒன்றினால் அறவிப்படும் வட்டி சதவீதத்தில் நூற்றிற்கு 4.25 தொகை ஊழியரிடம் அறவிடப்படுவதுடன் வங்கி அறவீடு செய்யும் சதவீதம் மற்றும் நூற்றிற்கு 4.25 இடைப்பட்ட வித்தியாசத்தை ஆணைக் குழுவினால் வங்கிக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் போது 04 உத்தியோகத்தர்களினால் விதிகள் அல்லது விதி முறைகளை செயற்படுத்த வேண்டும்.'' அதன் படி வரைபு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு பந்தி இலக்கம் (i) (ii) (iii) (iv) என்பவற்றிற்காக பின்வரும் பதில்களை சமர்ப்பிக்கின்றேன்.

(அ) இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுச் சட்டத்தின் பிரிவு 12(3) படி அதன் 12(1) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக விதிகள் தயாரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2005 மார்ச் 14 அந் திகதிய ஜனாதிபதிச் செயலாளரினால் இந்த ஆணைக்குழு தலைவருக்கு அனுப்பியிருந்த இலக்கம் DMD/03 இலக்கங் கொண்ட கடிதத்தின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டு இருந்தது.

(இ) இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவரினால் அவரின் இலக்கம் PUC/SEC/3 மற்றும் 2006 ஜூலை 31 திகதி பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் பிரதி ஒன்றுடன் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

பெற்றிருந்த வாகன கடனுக்கான வட்டி என ரூபா 187,013 ஆணைக் குழுவினால் வங்கிக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(iv) ஆணைக் குழுவின் நிரந்தர ஊழியர்களுக்காக ரூபா 8 மில்லியன் உச்ச வரையறை மற்றும் 15 வருட கால வரையறையின் கீழ் வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன் திட்டம் 2018 ஆகஸ்ட 18 திகதிய 220 இலக்கங் கொண்ட ஆணைக் குழு பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன்படி ஊழியர்களினால் அரச வங்கி ஒன்றில் இருந்து பெற்றுக் கொள்ளும் வீடமைப்பு மற்றும் ஆதனக் கடனுக்காக அறவிடப்படும் வட்டியில் 4.25 சதவீதத் தொகை ஊழியரினால் செலுத்த வேண்டியிருந்ததுடன், வங்கி அறவீடு செய்யும் வட்டி மற்றும் 4.25 சதவீதத்திற்கு இடைப்பட்ட வித்தியாசத்தை ஆணைக் குழுவினால் வங்கிக்கு மீளளிப்புச் செய்யப்படுகின்றது. இதன் படி மீளாய்வாண்டின் போது 17 உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வீடமைப்பு மற்றும் ஆதனக் கடனுக்காக வட்டி என கூட்டுத் தொகை ரூபா 2,395,761 தொகை ஆணைக் குழுவினால் வங்கிக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய இலக்கம் PED/1/2015(i) கொண்ட பொது தொழில் முயற்சிகள் சுற்றிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் போக்குவரத்து படி பெற்றுக் கொள்வதற்கு உரிமை உடைய உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவாக ரூபா 50,000 இற்கான மாதாந்த கொடுப்பனவு ஒன்று வழங்கக் கூடியதாக இருந்த போதிலும், ஆணைக் குழுவின் செயல் நடவடிக்கை முறை கோவையின் கீழ் அந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளை மிகைத்து போக்குவரத்து கொடுப்பனவு என ரூபா 60,000 தொகை மற்றும் சாரதிக் கொடுப்பனவு என ரூபா 20,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடுகளுக்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் கூட்டுத்தொகை ரூபா 13,140,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுச் சட்டத்தின் பிரிவு 12(3) இன் படி விதிகள் தயாரிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தின் படி ஆணைக் குழுவின் செயற்படு முறைமை கோவை தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகள் மீது இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | தயாரிக்கப்பட்டிருந்த தாபன நிருவாக மற்றும் செயற்படு முறைமை கோவையை திறைசேரிக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (இ) | 2015 மே 25 திகதிய PED – 1/2015 இலக்கங் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் பந்தி 3.1 | அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரிமை உடைய உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய எரிபொருள் லீற்றர் எண்ணிக்கைக்கு உரிய பெறுமதியை மிகைத்து ஆணைக் குழுவின் அங்கீகாரத்தின் மீது எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. | ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதி அறிவுரைக் கோவை, மனிதவள மற்றும் நிருவாக நடவடிக்கை முறை கோவை (Financial Manual, Human Resource and Administration Procedure Manual) மீது இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என குறிப்பிடுகின்றேன். | தயாரிக்கப்பட்டுள்ள தாபன நிர்வாகம் மற்றும் செயற்படு முறைமை கோவை திறைசேரிக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் நிதிச் செயற்படு முறைமைக் கோவை | ஏதேனும் விஷேட கருமம் ஒன்றிற்காக நிறைவேற்று தரத்தை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் ரூபா 20,000 இற்கான உச்ச மட்ட அடிப்படையில் நிமித்தக் கட்டுநிதி குறிப்பிட்ட விஷேடத்துவ கருமத்திற்கு அண்மித்த தினத்தில் உத்தியோகத்தருக்கு வழங்க வேண்டியிருந்ததுடன் உத்தியோகத்தரினால் அந்த கருமம் முடிவடைந்து 2 அல்லது 3 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்தது. எனினும் | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதிச் செயற்படு நடைமுறைமைக் கோவையின் 12.8.3 பிரிவின் படி அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சித் திட்டத்திற்காக தேவையான முற்பணத் தொகை தீர்மானிக்கப்படவில்லை என கருணையுடன் அறிவிக்கின்றேன்.<br><br>2020 ஆண்டில் நாட்டில் ஏற்பட்டிருந்த பேரழிவு நிலைமை, மேல் மாகாணம் | |

| | | |
|---|---|---|
| இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவினால் வழங்கியிருந்த நிமித்தக் கட்டுநிதி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | நீண்ட காலமாக மூடியிருத்தல் ஆகிய காரணங்களினால் இங்கு (ஈ) முதல் (வீ) வரையான குறைபாடுகள் பதிவேடுகளில் ஏற்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டம் முடிவடைந்தவுடன் வழங்கியிருந்த முற்பணத் தொகையில் செலவிடப்படாத தொகையினை நிறுவனத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் நிறுவனத்தில் பணம் முறைகேடாக பயன்படுத்தப்படவில்லை என அறிவித்துக் கொள்கின்றேன். மேலும் வினவியுள்ள ஐய வினாக்களுக்கு பின்வரும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (i) உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நிமித்த துணைக் கட்டுநிதி 43 நாட்கள் முதல் 326 நாட்கள் வரையான வீச்சில் கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. | (i) நிகழ்ச்சித் திட்டம் முடிவடைந்தவுடன் அதற்கான செலவழிக்கப்படாத மீதித் தொகை நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தமை. | செலவிடப்படாத மீதித் தொகை பணமாக மற்றும் செலவிடப்பட்ட தொகைக்காக கொடுப்பனவுக்கான சான்றுகளுடன் செலவுகளை தீர்க்கப்படல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நிமித்த துணைக் கட்டுநிதிகளில் கூட்டுத்தொகை ரூபா 46,500 தொகை செலவிடப்படாமல் காணப்பட்ட போதிலும், அந்தத் தொகை 2020 திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | (ii) முற்பணங்கள் தீர்க்கும் உறுதிச் சான்றுகள் சமர்ப்பிக்கும் போது அதில் அடங்கியுள்ள செலவுகளுக்காக சமர்ப்பிக்கும் தீர்த்தல் உறுதிச் சான்றுகள் மீதான பரிசோதனையின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த சில பற்றுச் சீட்டுக்கள் கருத்து முரண்பாட்டு தன்மையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு அங்கீகாரம் வழங்காமல் நிதிப் பிரிவின் மூலம் முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதனால் | நிமித்த துணைக் கட்டுநிதி செலுத்திய விடயம் முடிவடைந்ததுடன் அந்த முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இந்த குறைவாக தீர்த்தல் காணப்பட்டது. இந்தக் குறைவாக தீர்த்தலை அவர்களினாலேயே மிகையாக தீர்த்து இருந்த தொகைக்காக பின்னர் பதிலீடு செய்யப்படுகின்றது. எனினும் இவ்வாறு பிரதியீடு செய்தல் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (iii) உத்தியோகத்தர்களினால் பெற்றிருந்த நிமித்த துணைக் கட்டுநிதிகள் செலவிடப்படாமல் மீண்டும் தீர்க்க வேண்டிய தொகையை விட மிகையாக தீர்த்திருந்தமையால் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த நிமித்தக் கட்டுநிதி மீதி ரூபா 92,769 தொகையாக இருந்தது. | (iii) குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டம் முடிவடைந்தவுடன் உத்தியோகத்தர்களினால் அவர்களிடம் மீதியாக உள்ள பணம் தீர்க்கப்படுகின்றது. எனினும் அவர்கள் முற்பணங்களை தீர்க்கும் போது தீர்த்தல் உறுதிச் சான்றுடன் சமர்ப்பிக்கப்படும் செலவுகளை கணிக்கும் போது ஏற்கனவே மதிப்பீடு செய்த தொகையை விட செலவுகள் மிகையாக காணப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மிகையாக தீர்த்தல் காணப்படுகின்றது. இந்த மிகையாக தீர்த்தவைகளை பின்னர் அவர்களினால் முன்னர் குறைவாக தீர்த்தவைகளுக்கு சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | நிமித்த துணைக் கட்டுநிதி தீர்த்தல் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) ஒரே உத்தியோகத்தரினால் ஒரே நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒரே நாளில் ரூபா 309,770 தொகை பல | (iv) இவ்வாறு ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் நடைபெற்றிருந்தது. அதனை | நிமித்த துணைக் கட்டுநிதி வழங்குவதை முறைப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| உறுதிச் சான்றுகள் மூலம் நிமித்த துணைக் கட்டுநிதி பெறப்பட்டு இருந்தது. | இனங்கண்டவுடன் நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் மேற் கொள்ளப்படவில்லை. | |
| (v) ஒரே உத்தியோகத்தருக்கு ஒரே தினத்தில், அண்மித்த தினங்களில் நிமித்த துணைக் கட்டுநிதி வழங்கல் மற்றும் முன்னர் வழங்கப்பட்ட நிமித்த துணைக் கட்டுநிதியை தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் நிமித்த துணைக் கட்டுநிதி வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. | (v) நிறுவனத்தில் உள்ள வரையறுக்கப்பட்ட பதவியணியினை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தொடர்ச்சியாக ஈடுபடுத்த நேரிட்டமையால் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒரே நாளில் முற்பணம் வழங்குவதற்கு நேரிட்டிருந்த போதிலும், 2022 முதல் நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிமித்த துணைக் கட்டுநிதி வழங்குவதை முறைப்படுத்த வேண்டும். |
| (vi) நிமித்த துணைக் கட்டுநிதியாக வழங்கப்பட்டிருந்த ரூபா 115,495 தொகை முற்பணப் பதிவேட்டில் இரண்டு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. | (vi) இந்த வழு இனங்கண்ட உடனேயே சரி செய்யப்பட்டது. | நிமித்த துணைக் கட்டுநிதி வழங்குதல் மற்றும் தீர்த்தல் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |
| (vii) வழங்கியிருந்த நிமித்த துணைக் கட்டுநிதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த உறுதிச் சான்றுகளில் இலக்கங்கள் மற்றும் திகதிகள் தொடர்முறைப் பிரகாரம் முற்பணப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை | (vii) முற்பணப் பதிவேடு 2021 முதல் நாளது வரை ஆக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக முற்பணங்கள் வழங்கள் மற்றும் அவற்றின் கட்டுப்பாடு மேலும் முறைப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்காக உரிய நிதி செயற்படு முறைமையை திருத்துவதற்காக புதிய செயற்படு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் வரைபு முகாமைத்துவத்திற்கு சமர்ப்பித்து அவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் | நிமித்த துணைக் கட்டுநிதி வழங்கல் மற்றும் தீர்த்தல் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வரைபினை ஆணைக் குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுச் சட்டத்தின் மூலம் மின்சாரம், பெற்றோலியம் மற்றும் நீர் என்பவற்றை ஒழுங்குறுத்தல் | மின்சாரம், பெற்றோலியம் மற்றும் நீர் ஆகிய இலங்கையின் உட்கட்டமைப்பு வசதி கைத்தொழில்களை ஒழுங்குறுத்துவதற்காக 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுச் சட்டத்தின் மூலம் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவிற்கு அதிகாரம் அழிக்கப்பட்டிருந்தது.<br>பெற்றோலியக் கைத்தொழில் மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புக் கைத்தொழில் மேற்பார்வை செய்வதற்குத் தேவையான சட்ட வரைபு மீளாய்வாண்டு இறுதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான சட்ட வரைவுகளை தயாரிப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என கருணையுடன் அறிவிக்கின்றேன்.<br>• 2017 நீர்க் கைத்தொழில் அமைச்சின் மூலம் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் குறிப்பிட்ட வரைவு தயாரிப்பதற்காக நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) அவர்களின் பங்களிப்புடன் சட்ட வரைபுத் திணைக்களம் நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபை, இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழு உட்பட துணைக் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு வரைபுத் ஒன்று தயாரிக்கப்பட்டு 2019 மார்ச் 27 திகதி சட்ட வரைபுத் திணைக்களத்தின் மூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டிருத்தல்.<br>• 2002 இன் 32 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தை திருத்தும் வரைபு ஒன்று தயாரித்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2012 ஆம் ஆண்டில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறல் மற்றும் பெற்றோலிய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அந்த வரைபினை பாராளுமன்றத்திற்கு | பெற்றோலியம் மற்றும் நீர் ஒழுங்குறுத்தல் தொடர்பாக சட்ட வரைபுகள் தயாரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. |

சமர்ப்பிப்பதற்காக அமைச்சு இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 146,775,974 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 99,358,522 தொகையாக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 47,417,452 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஏனைய வருமானங்கள் 11 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல் மற்றும் உசாத்துணைச் சேவை செலவுகள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் முறையே 81 சதவீதத்தினால் மற்றும் 22 சதவீதத்தினால் குறைவடைதல் காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையினமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 பெப்ரவரி 12 திகதிய PUCSL/2016/183/FIN/02 இலக்கங் கொண்ட ஆணைக் குழுப் பத்திரம் மற்றும் 2016 பெப்ரவரி 18 ஆந் திகதி ஆணைக்குழுத் தீர்மானத்தின் படி இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியிருந்த பாதுகாப்பு வைப்புத் தொகை ரூபா 10,552,559 தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.<br>மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 47,441 தொகை மிகையாக, ரூபா 10,600,000 தொகை தீர்க்கப்பட்டிருந்தது. | 2016 பெப்வரி 18 ஆந் திகதிய ஆணைக்குழுத் தீர்மானத்தின் படி பாதுகாப்பு பிணை என வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 10,000,000 தொகையாகும். மீதித் தொகை அதற்காக செலவு வைக்கப்பட்ட வட்டி ஆகும். அதன் படி மீதியாகிய ரூபா 552,559 தொகை 2018 வரை கணிக்கப்பட்டிருந்த வட்டியாகும். எனினும் இந்த தொகை 2021 இல் திருப்பிச் செலுத்தும் போது நியாயமான வட்டித் தொகை ஒன்றுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அந்த அடிப்படையில் ரூபா 10,600,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மிகைக் கொடுப்பனவு ஒன்று நடைபெறவில்லை என அறிவிக்கின்றேன். | குறிப்பிட்ட காலப் பகுதியில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு, ஏற்படக் கூடிய நட்டத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது செலவுகள் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் வருமான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2002 இன் 35 ஆம் இலக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுச் சட்டத்தின் 33(2) பிரிவின் படி ஆணைக் குழுவினால் அடுத்த வருடத்திற்காக செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு செப்தெம்பர் 30 திகதிக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமான மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | பொது மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரிப்பதற்காக ரூபா 693,036 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்கான கோவை முறைப் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்குமாக வெவ்வேறாக கோவைகள் பேணிச் செல்ல வேண்டும் எனவும் அவற்றை நாளதுவரையாக பேண வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கப்பட்டு அந்த நிலைமை சரி செய்யப்பட்டது. | கோவைகள் முறைப் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் படி வருடாந்த ஒழுங்குறுத்தல் வரி ஒன்று/ கட்டணம் ஒன்று விதிப்பதற்காக ஆணைக் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அது, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30 திகதி அல்லது அதற்கு முன்னர் அனைத்து அனுமதிப் பத்திரங்களில் இருந்தும் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. 2020 ஆண்டு முதல் வருடாந்த ஒழுங்குறுத்தல் கட்டணம் அனுமதிப்பத்திரதாரர்கள் 82 பேரிடம் குறிப்பிட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் அறவீடு செய்திருக்கவில்லை. அந்த வருடாந்த ஒழுங்குறுத்தல் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட வேண்டிய அனுமதிப்பத்திரதார்களில் 44 சதவீதத்தை பிரதிநிதிப்படுத்தியது. | சட்டத்தின் விதி முறைகளின் படி வருடாந்த ஒழுங்குறுத்தல் கட்டணங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30 திகதி அல்லது அதற்கு முன்னர் அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் குறிப்பிட்ட அனுமதிப் பத்திரக் கட்டணம் செலுத்தும் படி அனுமதிப்பத்திரதார்களுக்கு கடிதங்கள் மற்றும் ஞாபகப்படுத்தல்கள் தொடர்ச்சியாக அனுப்பப்படுகின்றது. எனினும் குறிப்பிட்ட திகதியில் ஒரு சிறு தொகையினரே பணம் செலுத்துகின்றனர். எவ்வாறாயினும் குறிப்பிட்ட நிதி ஆண்டினுள் இந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு நிறுவனத்தினால் உச்ச அளவு முயற்சி ஒன்று எடுக்கப்பட்டது என குறிப்பிடுகின்றேன். | வருமானங்கள் மற்றும் கட்டணங்கள் குறிப்பிட்ட தினத்தில் சேகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியளவில் மின்சார வினியோகக் கோவை திருத்தப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திர முகாமைத்துவ முறைமையின் கருமத்தை பூர்த்தி செய்வதற்காக 2021 ஆண்டின் போது பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு கருமத்தை பூர்த்தி செய்வதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | திட்டமிட்டுள்ளவாறு கருமங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ii) | அனுமதிப்பத்திர முகாமைத்துவ முறைமையின் கருமங்களை பூர்த்தி செய்தல் மற்றும் மீளாய்வாண்டிற்கான ஆய்வு செயற்பாடுகள் கணக்காய்வுத் திகதி வரையும் முடிவடைந்திருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட நிலைமையின் படி இந்த செயற்பாடுகளை நிறைவேற்றுதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, அனுமதிப்பத்திரதாரர்கள் தொடர்பான செயற்பாடுகளுக்காக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. | திட்டமிட்டுள்ளவாறு கருமங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (iii) | இலங்கையில் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்காக வலுச்சக்தி வினைத் திறனுள்ள வீட்டு வடிவமைப்பொன்று அறிமுகப்படுத்தல், அறிவுருத்தல் மற்றும் மேம்படுத்தல் - UOM உடன் ஆய்வு மானியங்கள் மற்றும் அறிவை பகிர்ந்து கொள்ளும் செயற்திட்டம் நிறுவப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஆணைக்குழுவிற்கு முடியால் இருந்தது. | இது தொடர்பாக கோட்பாடு சார்ந்த விடயங்கள் மற்றும் நடைமுறை விடயங்களை உள்ளடங்கிய ஆய்வறிக்கை 2020 ஆண்டின் போது நிறுவனத்திற்கு வழங்கியிருந்த போதிலும் 2020 கொவிட் 19 தொற்றுநோய் பரவல் காரணமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிடம் சென்று வலுச் சக்தியை வினைத் திறனுடன் பயன்படுத்தல் தொடர்பாக அறிவுருத்தும் செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது. | திட்டமிட்டுள்ளவாறு கருமங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (iv) | இலங்கையில் அரச கட்டிடங்களை மறுசீரமைப்பதற்காக மாதிரிக் கட்டிட வடிவமைப்பு மற்றும் வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகிய விடயம் ஆணைக்குழுவினால் நெருங்கியிருக்கவில்லை. | மொரட்டுவ பல்கலைக் கழகத்தினால் மாதிரி கட்டிட வடிவமைப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகள் சேகரிக்கப்பட்டு உரிய ஆரம்ப செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், ஆய்வின் இறுதிக் கட்டம் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக | திட்டமிட்டுள்ளவாறு கருமங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது. | |
| (v) | கொள்திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சி வழங்கல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 6 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், கொவிட் - 19 மற்றும் அதனொடு தொடர்புடைய சமூக இடைவெளி பிரமாணங்கள் காரணமாக தெரிவு செய்யப்பட்ட நிகழ்வு நிலை பயிற்சி மற்றும் பௌதீக பயிற்சி வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த பயிற்சி வழங்கல்களின் செயலாற்றல், ஒட்டுமொத்த செயலாற்றல் முன்னேற்றத்தின் பத்து சதவீதம் என சித்தரித்துக் காட்டுவதற்கு முடியும். | பின்வரும் காரணங்களினால் திட்டமிடப்பட்டவாறு உத்தியோத்தர்களின் கொள்திறன் அபிவிருத்தி அலுவல்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது. ஆரம்பமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் மூலம் உத்தியோகத்தர்களின் கொள்திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வெளிநாட்டு நிறுவனங்கள் குறிப்பிட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தாமை.<br><br>உத்தியோகத்தர்களின் கொள்திறன் அபிவிருத்திக்காக நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படும் வெளிநாடுகளிலும் இந்த தொற்றநோய் நிலைமை காணப்பட்டமையால் அந்த நாடுக்கு செல்வதற்கான விமானப் போக்குவரத்துகள் செயற்படாமை.<br>எவ்வாறாயினும், உள்நாட்டில் நிகழ்வு நிலை அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட பத்து நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உத்தியோகத்தர்கள் பங்குபடுத்தப்பட்டு தேவையான கொள்திறன் அபிவிருத்தி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என அறிவிக்கின்றேன். | கொவிட் தொற்றுநோய் காரணமாக வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் இருந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக குறிப்பிட்ட குறிக்கோள்களை உள்நாட்டு நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (vi) | நீர் மற்றும் பெற்றோலிப் பிரிவிற்காக அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தயாரிப்பதற்காக ரூபா 1.2 மில்லியனிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2020 ஆண்டு இறுதி அளவிலும் அந்த விடயத்தின் ஆரம்ப மட்டம் மாத்திரம் | இது தொடர்பாக நிறுவனம் என்ற வகையில் மேற்கொள்ளப்படக்கூடிய உச்சமட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கைக்காக உரிய ஆவணங்கள் அமைச்சிற்கு | திட்டங்களுக்கு இணங்க வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | அதாவது சுமார் இருபது சதவீதம் செயலாற்றல் முன்னேற்றம் ஒன்றினை நெருங்கியிருந்தது. | ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீர் சேவை கைத்தொழில் ஒருங்குறுத்தலுக்கு தேவையான நிறைவேற்றப்பட்ட கருமங்களும் பெற்றோலியப் பிரிவினை ஒருங்குறுத்துவதற்காக தேவையான ஒருங்குறுத்தல் அலுவல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (vii) | இலங்கை மின்சார சபையின் மின்சார (வினியோகம்) செயலாற்றல் முன்னேற்ற பிரமாணங்கள் (வணிக ரீதியான பண்புசார் தன்மை) செயற்படுத்துவதற்காக DD2, DD3 மற்றும் DD4 என்பவற்றின் ஊட்டச்சத்து வகுப்புக்களின் வகைபடுத்தல் 2020 ஆண்டு வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மீதியான கருமங்கள், ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையால் தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மின்சார சபையினால் DD2, DD3 மற்றும் DD4 ஆகிய பந்திகளின் கீழ் வகைப்படுத்தலுக்குரிய மின்சக்தி வினியோகம் தொடர்பான அறிக்கை ஆணைக்குழுவிற்கு சமர்பித்திருக்காத காரணத்தினால் வாணிப ரீதியான பண்புசார் தன்மை தொடர்பான பிரமாணங்கள் செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. எனினும் இலங்கை மின்சார தனியார் கம்பனி இந்த தகவல்களை வழங்கியிருந்தமையால் அதற்குரிய ஊட்டசத்து வகுப்பு வகைப்படுத்தல் பூர்த்தி செய்யப்பட்டடிருந்தது. | திட்டங்களுக்கு இணங்க வேண்டியிருந்தது. |
| (viii) | நுகர்வோர் நடமாடும் சேவை நடாத்துவதற்காக ரூபா 2.28 மில்லியனிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கொவிட் - 19 அறிவுரைகள் மற்றும் வரையறுத்தல் காரணமாக ஒரு நிகழ்ச்சித் திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. அது ஒட்டுமொத்த செயலாற்றுகையின் சுமார் இருபத்தைந்து சதவீதம் காணப்பட்டது. | 2020 ஆண்டின் போது கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அரசாங்கத்தினால் பொதுமக்கள் ஒன்றுகூடல் தடை செய்யப்பட்டிருந்தமையால் இந்த அறிவுரை அலுவல்கள் நடாத்துவதற்கு முடியாமல் இருந்த போதிலும் கிடைத்திருந்த சலுகை கால அடிப்படையில் 2021 ஆண்டின் போது பின்வருமாறு மீதியான மாகாணங்களில் விரிவுரைகள் நடாத்தப்பட்டது.<br>வடமேல் மாகாணம் 2021 மார்ச்<br>வடமத்திய மாகாணம் 2021 நவம்பர்<br>மேல் மாகாணம் 2021 திசெம்பர் | திட்டங்களுக்கு இணங்க வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ix) | பெற்றோலிய உற்பத்திகளை பரிசோதனை செய்வதற்காக பரிசோதனை வசதிகள் நிறுவுவதற்காக பங்காண்மை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா ஒரு மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் செயலாற்றல்களில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் ஒன்றினை 2020 ஆண்டின் போது காட்டியிருக்கவில்லை. | பெற்றோலிய உற்பத்தியை பரிசோதனை செய்வதற்காக ஆய்வு வசதிகளை நிறுவுவதற்கான பங்காண்மை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக குறிப்பிட்ட ஆய்வு நிலையம் நிறுவும் அலுவல்கள் 2020 நவம்பர் மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஒக்தோபர் மாதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்து. | திட்டமிட்டவாறு கருமங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (x) | மசகு எண்ணெய் தொடர்பாக அறிவுருத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயலமர்வுகள் / சந்தை அறிக்கைகள் நிறைவேற்றுவதற்காக ரூபா 600,000 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் பதவிகள் நீண்ட நாட்களாக வெற்றிடமாக காணப்பட்டமையால் குறிப்பிட்ட அலுவல்கள் ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்காக முடியாமல் இருந்தது. | 2021 ஆண்டில் புதிய உத்தியோகத்தர்கள் சேர்ப்பதற்கு முடியுமானதன் காரணமாக அலுவல்கள் நாளதுவரை நிறைவேற்றப்பட்டு வருகின்றன. | திட்டங்களுக்கு இணங்க வேண்டியிருந்தது. |
| (xi) | நீர் பிரிவில் காணப்படும் இறுதி பயனர் கட்டணம் தொடர்பாக உதவி நிதி பகுப்பாய்வு ஒன்று மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில் அதன் கேள்வி முகாமைத்துவ சுங்கவரி ஊக்குவிப்பு கட்டமைப்பு தொடர்பாக பகுப்பாய்வு செய்தல் கட்டம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தரவுகள் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதியீனங்கள் காரணமாக நீர்ப்பிரிவில் காணப்படும் இறுதி பயனர் கட்டண உதவி நிதி பகுப்பாய்வில் 60 சதவீத அளவு பூர்த்தி செய்வதற்கு முடியுமாக இருந்தது. | திட்டத்திற்கு இணங்க வேண்டியிருந்தது. |
| (xii) | தற்போது வெளியிடப்பட்டுள்ள நுகர்வோர் சேவை வழிகாட்டல்களுக்கு இணங்குதல் என்ற கருமம் மீளாய்வாண்டின் போது 05 மாகாணங்களில் அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஈடுபடுத்தி மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் 02 மாகாணங்களின் நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது. அது ஒட்டுமொத்த செயலாற்றலின் 40 சதவீதத்தை மாத்திரம் பெற்றிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அரசாங்கத்தினால் சுகாதார காரணங்களுக்காக பொதுமக்கள் ஒன்று கூடுவதை தடை செய்திருந்தமையால் 2020 ஆண்டின் போது இந்த அறிவுருத்தல்கள் மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. 2021 ஆண்டில் வசதிகள் வழங்கப்பட்ட மாதங்களில் வடமத்திய மாகாணத்தில் 2021 மார்ச், | திட்டங்களுக்கு இணங்க வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | மத்திய மாகாணத்தில் 2021 நவம்பர், மேல் மாகாணத்தில் 2021 திசெம்பர் பூர்த்தி செய்யப்பட்டது. | |
| (xiii) | பயன்படுத்தப்பட்ட மசகு எண்ணெய் சேகரித்தல், மீள்சுழற்சி செய்தல், அப்புறப்படுத்தலுக்காக நடைமுறை ஒன்று தயாரித்தல் 2019 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 3 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அதன் கணிசமான முன்னேற்றம் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட நடைமுறை உள்ளடக்கிய அறிக்கை 2021 இரண்டாம் காலாண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் மீது பொது மக்களின் அறிவுரைகள் நடாத்துவதற்கு வசதியீனம் காரணமாக அதனை வெளியிடுவதற்கு முடியாமல் இருந்தது. | திட்டத்திற்கு இணங்க வேண்டியிருந்தது. |
| (xiv) | வ/ப இலங்கை மின்சார (தனியார்) கம்பனி (LECO) உடன் மின்சாரம் (வினியோகம்) செயலாற்றல் முன்னேற்றப் பிரமாணங்கள் (வாணிப நிலைமை) செயற்படுத்தல் தொடர்பாக செயலாற்றலை மதிப்பாய்வு செய்வதற்காக நடைமுறை தொடர்பான விதிகள், தேவைப்பாடுகள் மற்றும் சுட்டிகள் நிறுவுவதற்காக ஆணைக்குழுவிற்கு சாட்டப்பட்டிருந்தது. அதன் ஆரம்ப கட்டம் 2017 ஒக்தோபர் மாதம் அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், தரவுகள் கிடைப்பதில் தாமதங்கள் காரணமாக ஆரம்ப இரண்டு மாதங்களுக்கான சமர்பிக்கப்பட்ட செயலாற்றல் மதிப்பாய்வு செய்வதற்காக தரவுகள் மற்றும் உள்ளீட்டு மென்பொருட்கள் தொடர்ந்தும் பரிசோதனை செய்யப்பட்டு வருவதனால் அது தொடர்பான ஆக்கபூர்வமான முன்னேற்றம் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டின் போது இதன் மூன்றாவது கட்டத்திற்காக நடவடிக்கை முறை விதிகள் மற்றும் சுட்டிகள் நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. | திட்டங்களுக்கு இணங்க வேண்டியிருந்தது. |